www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

மதுரை மாவட்டம்.

HYM

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2024

10 - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

### பகுதி – I (மதிப்பெண்கள் – 15)

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

2. "பாடு இமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

3. "அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்" என்று விருந்தோம்பலின் சிறப்பைக் கூறும் நூல் ...... .
அ) குறுந்தொகை ஆ) நற்றிணை இ) புறநானூறு ஈ) கலித்தொகை

4. 'வாடா இராசா, வாடா கண்ணா' என்று தன் மகளைப் பார்த்துத் தாய் அழைப்பது ............ வழுவமைதி.
அ) திணை வழுவமைதி ஆ) கால வழுவமைதி இ) பால் வழுவமைதி ஈ) இடவழுவமைதி

5. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' – யாரிடம் யார் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

6. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

7. முன்பனிக்காலத்திற்குரிய மாதங்கள் .................... .
அ) ஆவணி, புரட்டாசி ஆ) ஐப்பசி, கார்த்திகை இ) மார்கழி, தை ஈ) ஆனி, ஆடி

8. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக மா.பொ.சி. கருதியது ............... .
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

9. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் .............. .
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

10. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
அ) உதியன், சேரலாதன் ஆ) அதியன், பெருஞ்சாத்தன்
இ) பேகன், கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன், திருமுடிக்காரி

11. "பிரிந்தன புள்ளின் **கானில்**
பெரிதமுது இரங்கித் **தேம்ப**" – பாடலடிகளில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருளைத் தெரிவு செய்க.
அ) கிளை, துளை ஆ) நிலம், வாட இ) காடு, வாட ஈ) காடு, நிலம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பாடலைப் படித்து விடை தருக.

"பகர்வனர் திரிதரு நகரவீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"

12. இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) சீவகசிந்தாமணி ஈ) வளையாபதி

13. பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.
அ) பட்டினும், கட்டு ஆ) பகர்வனர், நகரவீதி இ) காருகர் - அகிலும் ஈ) பகர்வனர், பட்டினும்

14. காருகர் - பொருள் தருக.
அ) வெற்றிலை விற்பவர் ஆ) எண்ணெய் விற்பவர் இ) நெய்பவர் ஈ) ஓவியர்

15. இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?
அ) தூசும் துகிரும் ஆ) ஆரமும் அகிலும் இ) பட்டினும் மயிரினும் ஈ) பட்டு, பருத்தி நூல்

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1

**II** **எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**
**(21-வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.)**

16. **விடைக்கேற்ற வினா அமைக்க.**
அ) அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக் கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது.
ஆ) 2010 ஆம் ஆண்டு கோவையில், தமிழ்நாடு அரசின் சார்பில் கலைஞர், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்தினார்.

17. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

18. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

19. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

20. குறிப்பு வரைக. அவையம்.

21. 'உலகு' என முடியும் குறளை எழுதுக.

**III** பிரிவு - 2 **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

22. **சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க. (காடு, புதுமை, காற்று)**
அ) இருக்கும் போது உருவமில்லை ............. இல்லாமல் உயிரினம் இல்லை ............. .
ஆ) ஓரெழுத்தில் சோலை ............... இரண்டெழுத்தில் வனம் ..................... .

23. **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**
அ) தொடு - தோடு ஆ) விடு - வீடு

24. **தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றுக.**
அ) இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். **(கலவைச் சொற்றொடராக மாற்றுக.)**
ஆ) ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது **(தனிச்சொற்றொடர்களாக மாற்றுக.)**

25. **கலைச்சொல் தருக.** அ) Modern literature ஆ) Humanism

**(செவிமாற்றுத் திறனாளிகளுக்கான மாற்று வினா)**
**பழமொழிகளை நிறைவு செய்க.**
அ) உப்பில்லாப் ............... . ஆ) விருந்தும் ................... .



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

26. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
அ) கண்ணும் கருத்தும் ஆ) மனக்கோட்டை
27. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக. புதுக்கோட்டை, மயிலாப்பூர்.
28. ஒலித்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**பகுதி – III (மதிப்பெண்கள் : 18) பிரிவு – 1**

**IV எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.**

29. "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ" – வினவுவது ஏன்?
30. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்து கொண்ட இரண்டினை எழுதுக.
31. **உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார். இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் நச்செள்ளையார். பேகன் மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்கிறார் பரணர். தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, தான் நாட்டை இழந்த துன்பத்தைவிடப் பெருந்துன்பம் எனக் குமணன் வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார்.

அ) ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு யாது?
ஆ) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் யார்? இ) பேகன் எப்படிப்பட்டவன்?

**V பிரிவு – 2 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.**
**(34-வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.)**

32. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.
33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.
34. **அடிபிறழாமல் எழுதுக.**
"வாளால் அறுத்துச் சுடினும்" – எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடலை எழுதுக.
*(அல்லது)* "நவமணி வடக்கயல்" – எனத் தொடங்கும் தேம்பாவணி பாடல்

**VI பிரிவு – 3 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.**

35. தோட்டத்தில் மல்லிகைப் பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.
இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக.
36. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.
37. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். – அலகிட்டு வாய்ப்பாடு தருக.

**பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)**


**VII குறிப்பு : தேர்வர் கடிதம் / படிவம் ஆகியவற்றை எழுதும்போது கீழ்க்காணும் முகவரியைத் தன்னுடையதாகக் கொள்க.**
**(அ. தமிழரசன், த/பெ அன்பழகன், 10, கோவலன் தெரு, மதுரை – 05)**
**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

38. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. *(அல்லது)*
ஆ) பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.
39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக. *(அல்லது)*
ஆ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. கொடுக்கப்பட்டுள்ள மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42. அ) திறன்பேசியிலேயே தொடர்ந்து விளையாடிக் கொண்டிருக்கும் தங்கையை நெறிப்படுத்த நீ செய்யும் முயற்சிகளை எழுதுக. *(அல்லது)* ஆ) மொழிபெயர்க்க:

The Golden Sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் `உதவியாண்மை' என்று குறிப்பிடுகிறார். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும் போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் தியாகம்தானே எண்ணெய்யாக இருக்க முடியும்? பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார். `உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான்' என்கிறார் நல்வேட்டனார்.

அ) அன்பு என்னும் சுடருக்கு எண்ணெய்யாக இருப்பது எது?

ஆ) சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் எதைக் காட்டுகின்றன?

இ) உண்மையான செல்வம் என்று நல்வேட்டனார் குறிப்பிடுவது எதனை?

ஈ) உதவி செய்தலை `உதவியாண்மை' என்று குறிப்பிடுபவர் யார்?

உ) சான்றோர் கடனாக நல்லந்துவனார் குறிப்பிடுவது யாது?

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**VIII அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க.**

43. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் `செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக. *(அல்லது)*

ஆ) போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் - நாடகக் கலைஞர் - திரைக் கலைஞர் - இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. *(அல்லது)*

ஆ) அழகிரிசாமியின் `ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. *(அல்லது)*

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் `மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com